சுருக்கம்

ஆதிதிராவிடர் நலம்–2015–2016–கல்வி–விடுதிகள்–ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர்களுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந4)துறை

அரசாணை (நிலை) எண்.7

நாள்.08.01.2016
திருவள்ளுவர் ஆண்டு 2046
மார்கழித்திங்கள் 23–ஆம் நாள்
படிக்கப்பட்டது.

ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கடித எண்.த1/22727/2015 நாள்.07.09.2015.

ஆணை:

2015–2016–ஆம் ஆண்டுக்கான வரவு செலவு திட்ட கூட்டத் தொடரில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டமன்ற பேரவை விதி 110–இன் கீழ் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டுள்ளார்.

> ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர் அவரவர் வசதிகளுக்கு ஏற்ப தட்டு மற்றும் டம்ளர்களை பயன்படுத்தி வருகின்றனர். மாணவ / மாணவியரிடம் ஒன்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் நோக்கத்தில், 1,314 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 98,039 மாணவ / மாணவியருக்கு, 1 கோடியே 46 லட்சம் ரூபாய் செலவில் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்கப்படும்.

2. இது தொடர்பாக மேலே படிக்கப்பட்ட ஆதிதிராவிடர் நல இயக்குநரின் கருத்துருவில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 1314 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் 98,039 மாணவ / மாணவியர் தங்கி கல்வி பயின்று வருவதாகவும், இவர்களுக்கு சரி விகித உணவுப் பட்டியலில் உள்ளபடி உணவு வழங்கப்பட்டு வருவதாகவும், விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணவ / மாணவியர் அவரவர் வசதிகளுக்கு ஏற்ப தட்டு மற்றும் டம்ளர் பயன்படுத்தி வருவதாகவும், மாணவ / மாணவியரிடம் ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் நோக்கோடு ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயின்று வரும் அனைத்து மாணவ / மாணவியருக்கும் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்குவது மிகவும்

அவசியமாகும் எனவும் தெரிவித்துள்ளார். எனவே, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் கீழ் இயங்கி வரும் 1314 ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 98,039 மாணவ / மாணவியருக்கு தலா ரூ.150/- வீதம் ரூ.1,47,05,850/- மதிப்பீட்டில் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர்களை திறந்த வெளி ஒப்பந்தமுறையில் வாங்கி வழங்கிட உரிய அரசாணையும், அதற்காக தேவைப்படும் ரூ.1.47 கோடி (ரூ.150x98039) நிதியினையும் ஒதுக்கீடு செய்யுமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேலே பத்தி 2-இல் உள்ள ஆதிதிராவிடர் நல இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு நன்கு ஆய்வு செய்து, ஆதிதிராவிடர் நல விடுதிகளில் தங்கிப் பயிலும் 98039 மாணவ / மாணவியர்களுக்கிடையே ஒற்றுமையையும், ஒருமைப்பாட்டையும் வளர்க்கும் வகையில் எவர்சில்வர் தட்டு ரூ.75/- மற்றும் டம்ளர் ரூ.35/- ஆக மொத்தம் ஒருசெட் தலா ரூ.110/- வீதம் ரூ.1,07,84,290/- (ரூபாய் ஒரு கோடியே ஏழு இலட்சத்து எண்பத்து நான்காயிரத்து இருநூற்று தொன்னூறு மட்டும்) செலவில் வாங்கி வழங்க கீழ்க்குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்களுக்குட்பட்டு நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

(i) இத்திட்டத்திற்கென வாங்கப்பட வேண்டிய எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் தமிழ்நாடு திறந்தவெளி ஒப்பந்த புள்ளி சட்டம் 1998 மற்றும் விதிகள் 2000-இன்படி விதிகளை அனுசரித்து வாங்க வேண்டும்.

(ii) அந்நிறுவனத்தால் நிர்ணயிக்கப்படும் விலை தோராய விலைக்கு குறைவாக இருக்கும் பட்சத்தில், அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையில் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கிவிட்டு மீதித் தொகை அரசுக்கு சரண் செய்யப்படுதல் வேண்டும்.

4. மேலே பத்தி 3-இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் கீழ்க்காணும் கணக்குத்தலைப்புகளின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்.

| கணக்குத் தலைப்பு | மாணவ / மாணவியர்களின் எண்ணிக்கை | தொகை |
|---|---|---|
| "2225-ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்-01 ஆதிதிராவிடர் நலன்-277 கல்வி I திட்டத்தில் சேராதது-AE மாணவர் இல்லங்கள் 24-பொருட்களும் வழங்கலும்" (கு.தொ.கு.2225 01 277 AE 2401) | 74505 | 74505 x 110 ரூ.81,95,550/- |

| | | |
|---|---|---|
| "2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–01 ஆதிதிராவிடர் நலன்–277 கல்வி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–KD மாணவர் இல்லங்கள்–24 பொருட்களும் வழங்கலும்" (து.தொ.கு.2225 01 277 KD 2403). | 22484 | 22484 x 110 ரூ.24,73,240/- |
| "2225–ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் ஏனைய பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலன்–01 ஆதிதிராவிடர் நலன்–277 கல்வி–பன்னிரெண்டாம் ஐந்தாண்டுத் திட்டப் பணிகள்–II மாநிலத் திட்டம்–KE ஆதிதிராவிடர் நல பட்டமேற்படிப்பு மாணவர் இல்லத்தை தொடங்குதல்" 24 பொருட்களும் வழங்கலும்" (து.தொ.கு.2225 01 277 KE 2401). | 1050 | 1050 x 110 ரூ.1,15,500/- |
| மொத்தம் | 98039 | ரூ.1,07,84,290/– |

5. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் ஒரு 'புதுப் பணி' (New Service) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிர்பாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதித்(வரவு–செலவு–I) துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்டமன்ற பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963–இல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதித்(வரவு–செலவு–I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் அவர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார். மேலும், இக்கூடுதல் செலவினத்தை 2015–2016–ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு உரிய கருத்துருவை தவறாது உரிய நேரத்தில் நிதித்(ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம்)துறைக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

6. மேலே பத்தி 3–இல் ஒப்பளிக்கப்பட்ட தொகையை ஆதிதிராவிடர் நல இயக்குநர் பெற்று, அதில் தெரிவித்துள்ள நிபந்தனைகள் மற்றும் நடைமுறையில் உள்ள விதிமுறைகளை பின்பற்றி, இயக்கக அளவில் ஒருமுகப்படுத்தப்பட்ட ஒப்பந்தப்புள்ளி (Centralised Tender) மூலம் எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி சம்மந்தப்பட்ட மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள் மூலமாக அவற்றை வழங்க அதிகாரம் அளிக்கப்படுகிறது.

7. இவ்வரசாணையின்படி ஆதிதிராவிடர் நல விடுதி மாணவ / மாணவியர்களுக்கு எவர்சில்வர் தட்டு மற்றும் டம்ளர் வாங்கி வழங்கப்பட்ட பின்னர் உரிய அறிக்கையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறு ஆதிதிராவிடர் நல இயக்குநர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

8. இவ்வாணை நிதித்துறையின் இசைவினை அதன் அ.சா.கு.எண்.69765/ நிதி(ஆதி(ம)பந)/2015 நாள்.05.01.2016 மற்றும் கூடுதல் நிதி ஒதுக்க பேரேடு எண். 1845 (ஆயிரத்து எண்ணூற்று நாற்பத்தைந்து) பெற்று வெளியிடப்படுகிறது.

//ஆளுநரின் ஆணைப்படி//

ப. அண்ணாமலை
அரசுச் செயலாளர்.

பெறுநர்:-
இயக்குநர், ஆதிதிராவிடர் நலம், சென்னை-5.
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்
அனைத்து மாவட்ட ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை-5.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
முதன்மை கணக்காயர் (G & SSA), சென்னை-18.
மாநில கணக்காயர், சென்னை-35/9/18.

நகல்:-
முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
அமைச்சர் (ஆதி(ம)பந) அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை
செயலர் அவர்களின் நேர்முக உதவியாளர், சென்னை-9.
ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் (ஆதிந-2) துறை, சென்னை-9.
நிதி(ஆதி(ம)பந/வ.செ.பொ-I/வ.செ.பொ-II)துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு/உபரி.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.